**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.30/2023** |
| Sessions | : | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : **P.W. 2** |
| | Defence | : **D.W.** |
| | Court | : **C.W.** |

| **Name :** | சக்திவேல் | **S/o.** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **04.04.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் நொச்சிக்குளத்தை சேர்ந்தவர். விவசாயம் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அப்பாதுரைக்கும் ஆறுமுகத்திற்கும் ஏற்கனவே நிலப்பிரச்சனை இருந்தது. அப்பாதுரை கம்பிவேலி வைத்ததற்காக எதிரிகள் 23.12.2015 அன்று நிலத்தில் போய் தகராறு செய்தார்கள். ஆறுமுகம் வகையறா கம்பியை உடைத்து மண்ணை நிரவிவிட்டதாக அப்பாதுரை சொன்னார். ஆஜர் எதிரிகளும், அந்தஇடத்தில் இருந்தார்கள். நான் அந்த வழியாக போனபோது தான் பிரச்சனை நடந்ததை பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் சம்பவம் சம்பந்தமாக மறுநாள் விசாரித்தார்கள். அப்பாதுரை சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் நான் அந்த வழியாக போனபோது பார்த்தேன். சம்பவ இடத்திலேயே மறுநாள் போலீசார் விசாரித்தார்கள். தினமும் அந்த வழியாக தான் நான் போவேன். இந்த வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. அப்பாதுரை எனக்கு சொந்த பெரியப்பா. நான் சொல்வதுபோல சம்பவம் நடக்கவில்லை என்றும்

எனது பெரியப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.